### தலைவர் கலைஞரின் நூற்றாண்டுத் தொடங்கும் இந்நாளில் –

# தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து - நமது இயக்க இலக்குகளை அடைய உறுதியேற்போம்!

## சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை,ஜூன் 4-

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுத்தொடங்கும்இந்நாளில், கலைஞர் புகழைப் போற்றி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து, நம் இயக்க இலக்குகளை அடைய உறுதியோடு அவர் வழி நடப்போம்!” என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100ஆவது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட தமிழ்ச்சமூகம் சனாதனப் பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து உறுதியாய் எழுந்து நின்றது.**

**இந்த மண்ணுக்கான மக்களுக்கான திராவிட இயக்கம் தோன்றியது.**

**புத்தர் முதல் வள்ளலார் வரை இந்த மண்ணில் விதைத்த புரட்சியின் அடித்தளத்தில் திராவிட இயக்கம் வேரூன்றியது.**

**அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன், பிட்டி தியாகராயர், நடேசனார், டி.எம்.நாயர் ஏ.பி.பாத்ரோ, எம்.சி.இராஜா, பனகல் அரசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா எனத் தமிழினத்தின் இனமான பகுத்தறிவு சுய மரியாதை உணர்வைக் காத்திட உருவான தலைவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து**

**தலைமை தாங்கியவர் நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞர் அவர்கள்!**

**எண்ணற்ற சமூகநலத் திட்டங்களால் இன்றைய நவீனத் தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி அவர்!**

**தமிழ்நாட்டின் அடையாளமாக விளங்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடங்கும் இந்நாளில், அவரது புகழைப் போற்றி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து, நம் இயக்க இலக்குகளை அடைய உறுதியோடு அவர் வழி நடப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### ரயில் விபத்து: உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

# அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 4-

“ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 3.6.2023-அன்று நடைபெறவிருந்த அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள்நேற்றுமுன்தினம் ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளதோடு, முதலமைச்சர் அவர்கள், இரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதாகவும், தேவைப்படின், தமிழ்நாட்டின் மருத்துவக் குழு மற்றும்இதர உதவிகளைஅனுப்பி வைப்பதாகவும் ஒடிசா மாநில முதலமைச்சரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துக் கொண்டார்.

மேலும், மீட்பு பணிகளில் உடனிருந்து தமிழ் நாட்டினருக்குத் தேவையான உதவிகளைச் செய்திட போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல்தலைமைச் செயலாளர் க. பணீந்திரரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக் ஆகியோர் கொண்ட குழு விபத்து நடைபெற்ற ஒடிசா மாநிலத்திற்கு விரைந்து செல்ல தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் ஒடிசா இரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும்வகையில்3.6.2023அன்று ஒரு நாள் மட்டும் துக்கம் அனுசரிக்கப்படும். மேலும், அரசின் சார்பில் 3.6.2023 அன்று நடைபெறவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி, மழை நீர்வடிகால் துறை**

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1571 /2023

**இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பு**

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்பு தொகை | ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1571-2/2023 மண்டலம்-5, வார்டு-56, 57, 61 மற்றும் 63 உள்ள தங்கசாலை தெரு மற்றும் கெங்கு ரெட்டி தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி சிப்பம்-35 மற்றும் 40 குறுகிய கால ஒப்பம் | ரூ.682.44 மற்றும் ரூ.542.21 | பணியின் அலுவலக மதிப்பில் 1% | வகுப்பு -1 |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 19.06.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 20.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2827 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்புபொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.06. 2023 அன்று ஒரகடத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை திறந்து வைக்கிறார். அது சமயம் தொழிலாளர் நலன்மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொழிற்பயிற்சி நிலையத்தை ஆய்வு செய்தார். உடன் துறை அலுவலர்கள் உள்ளனர்.






கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் ஈராண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் அத்தியூர் ஊராட்சியில் ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் டி.ஹரிகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, கரூர் முரளி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். ஆர்.பத்மநாபன் வரவேற்புரை ஆற்றினார். க.செல்வம், ஏ.வி. செந்தில்குமார், கே.ராஜேந்திரன், எம்.குமார், தனலட்சுமி கோவிந்தன், ஆர்.சதீஷ், எஸ்.மோகனாசெல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.துரைமுருகன், தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பெருமாள், கே.அண்ணாதுரை, ஆதி.கு.கோவிந்தராஜ், எம்.ராஜேந்திரன், ஆர்.ராஜி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். எஸ்.ராஜாராம், எம்.பி.நாகார்ஜுன் ஆகியோர் நன்றி உரை ஆற்றினர்.

# புகழ் வாழும் ஆயிரமாண்டு!



மணல் வீட்டில்
நட்சத்திரங்கள்
மறைந்து வைத்து
விளையாடும்
நிலா
நீ !

அஞ்சுகத்தாய்
தொட்டிலில்
தாலாட்டிய
சங்கப்பலகை
நீ !

ஆதிக்கத்தை
தெறிக்க விடும்
சிலிண்டர் வெடி
நீ !

சிறைச்சாலை
பெருமையாகிறது
நீ
இருந்ததால் !

சிறைச்சாலை
வாசல்
வரலாறு ஆகிறது
நீ
அமர்ந்ததால் !

தஞ்சை கோவிலின்
பத்திரிகைப் பேட்டி
புகழில்
நீயே
நிலைப்பாய்
என்று !

அலைகள்
ஓடிவந்து ஓடிவந்து
கேட்கிறது
அண்ணாவோடு
நீ
என்ன பேசுகிறாய்
என்று !

இரத்தத்தில்
நீ
வரைந்தக்கொடி
கோட்டையில்
பறக்கிறது !

உன் மகன்
ஆட்சிக் கொடி
இந்தியாவை
கடந்து
பறக்கிறது !

வண்ணத்துப்பூச்சிகள்
இதழில்
முட்டி மோதும்
ஒரே ரோசா
நீ !

சேர சோழ பாண்டிய
இராசாகளுக்கே
ஒரே இராசா
நீ !

ஆயிரமாயிரம்
சிப்பிகள்
கொண்டாடிய
முத்துவேலர்
முத்து
நீ !

ஆயிரமாயிரம்
சிற்பங்கள்
கொண்டாடும்
அறிவாலய
சிற்பம்
நீ !

சக்ர வியூகத்தை
உடைப்பது
மட்டுமல்ல
அமைப்பதும்
நீ !

உன்
கடிதத்தில்
சமத்துவ
மழைத்துளிகள் !

உன்
கவிதையில்
மொழிப்போர்
தீத்துளிகள் !

உன்
நாடகங்களில்
பெண்ணுரிமை
நெருப்பு பொறிகள் !

உன்
பத்திரிகை
பேட்டிகளில்
ஏழை வாழ்வின்
மல்லிகைக்
கொடிகள் !

இறந்தபிறகும்
இருக்கிறாய்...
உன் மகன் மூலம்
சிறக்கிறாய் !

புகைப்படத்தில்
சிரிக்கிறாய்...
பேனா
வைக்காட்டி
பகை
அறுக்கிறாய் !

குனிந்ததே
இல்லை
உன் செங்கோல் !
வளைந்ததே
இல்லை
உன் எழுதுகோல் !

சூலாயுதவாதிகளை
ஈரோட்டு
பேராயுத்தால்
சாய்த்தவன் நீ !

நீர் நிலைகள்
திருவிழா
எடுக்கும்
பனை நீ !

வெட்டியவர்
கடித்தாலும்
இனிக்கும்
கரும்பு நீ !

வீரர்களை
வீசியாடும்
பாலமேடு
காளை நீ !

மின்னல்கள்
கோடு கிழித்து
வானில்
உன்னை
வரைகிறது !

மழை மேகம்
ஊரை
நனைத்து
உன்
போர் குணம்
சொல்கிறது !

இடியை மிரட்டும்
உன் உரை
அரசியலை
வெல்கிறது !

வாத்தியகருவிகளால்
வாசிக்க முடியாத
உன் குரலை
அருங்காட்சியகம்
கேட்கிறது !

ஷாஜகானை
தேடுகிறது
தாஜ்மகால்
கோபாலபுரத்தில் !

உன் தலைமை
கவிதையைக் கேட்க
காத்திருக்கிறேன்
கலைவாணர்
அரங்கத்தில் !

நீ ஏற்றிய
தன்மான
நெருப்பை
ஏந்துவோம்
காஞ்சிபுரத்தில் !

சமூக நீதியை
காப்பார்
தலைவர்
முக ஸ்டாலின்
உன்
பயணத்தில் !

தலைவா
உனக்கு
நூறாண்டு
உன் புகழ் வாழும்
ஆயிரமாண்டு !


**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி








தலைமை தி.மு.க. தீர்மானக் குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், நேற்று காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழகத் தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையிலும் தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைத்திலிங்கம், கீரை எம்.எஸ்.விஸ்வநாதன், அக்ரி கே.பி.டி.கணேசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் க.வேங்கடபதி, மு.முத்துச்சாமி, பி.நாச்சி முத்து, வ.சத்தியமூர்த்தி, எம்.ஜெயக்குமார், ஆர். சேதுநாதன், ஆதி.சங்கர், ரெஜினால்ட், வெற்றிச்செல்வன், ப.சரவணன், செஞ்சிசிவா, மு.இரா.செல்வராஜ், எம். வீரகோபால், என்.வி.காமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.